# இதய ஒலி

## தி/மூ/திரு இருதய வித்தியாலயத்தின் செய்தி மலர்

வெளியீடு: 01 | நான்கு மாத வெளியீடு | ஜனவரி – ஏப்ரல்

## முதல் வெளியீடு

**110வது ஆண்டு**

நிறைவை முன்னிட்டு
ஆரம்பிக்கப்படும் புதிய முயற்சி.
பாடசாலையின் நிகழ்வுகளை ஏனைய கல்விச்
சமூகங்களோடு பகிர்ந்துகொள்ளுவதன் மூலம்
முழு மனித ஆளுமையைக் கொண்ட புதியதொரு
சமுதாயத்தை உருவாக்கும் நோக்குடன் ஒவ்வொரு
தவணையும் வெளிவரத் துடிக்கும் எங்கள்

**இதய ஒலி**

01.03.1903 → **110வது ஆண்டு** ← 01.03.2013

தி/மூ/திரு இருதய வித்தியாலயம்
இருதயபுரம், மூதூர்
01.03.2013

## அதிபரின் இதயத்திலிருந்து...

வெறுமனே உயிருடன் இருப்போரையும், வாழ்வை வாழ்ந்துகொண்டு இருப்போரையும், தாம் வாழ பிறர் வாழ்வை பழுதாக்குகின்றவர்களையும், மற்றவரை வாழ வைக்கின்றவர்களையும், இன்னும் சிறப்பாக பிறர் வாழ தம்மையே தியாகம் செய்கின்றவர்களையும் தாங்கிக் கொண்டிருக்கும் இப் பூமியிலே நாமும் மனிதர்களாக அங்கம் வகிக்கின்றோம். இந்த உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு உயிரும் வாழத் துடிக்கின்றது. இவ்வுலகில் வாழும் நாட்களை நாம் வெறுமனே உயிருடன் இருப்பதில் செலவிடாமல் எமது வாழ்வை சிறந்த வாழ்வாக்க, வரலாறு படைக்க அனைவரும் முனைந்துவரும் காலம் இது.

இந்த வரலாற்றுப் பயணத்திலே இன்று எமது பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட 110வது ஆண்டு நிறைவை கொண்டாடுகின்றோம். இது பலரை வியப்பில் ஆழ்த்துவதோடு பல கேள்விகளை எழுப்பும் என்பதில் எதுவித வியப்பும் இல்லை. இப் பாடசாலையை நம்பியுள்ள இப் பிரதேசத்தின் சிறுவர்களை எதிர்கால சவால்களுக்கு ஈடுகொடுக்கக் கூடியதும் சமூகத்திற்குப் பொருத்தப் பாடுடையதுமான முழு மனித ஆளுமையைக் கொண்ட ஆரோக்கியமானவர்களாக உருவாக்குவதில், பலவித சவால்களின் மத்தியிலும் அதி கூடிய முயற்சி எடுத்து வருகின்றோம்.

எமது பாடசாலையின் 110வது ஆண்டு நிறைவை வெறுமனே கொண்டாட்டத்துடன் நிறுத்தி விடாமல் இம்மாபெரும்

நிகழ்வை எமது பாடசாலையின் வரலாற்றுப் பாதையில் ஒரு திருப்பு முனையாகப் பதிக்க விரும்புகின்றோம். அதற்கான எமது கனவின் நிஜமே இந்த **இதய ஒலி.** இது வெறுமனே ஒரு சஞ்சிகையல்ல மாறாக இது எங்கள் இதயத் துடிப்பு. பாடசாலையின் 110வது ஆண்டு நிறைவை ஒவ்வொரு தவணையும் நினைவு கூறும் வகையில் இதை எமது சாதனையாகப் படைப்பதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம். இந்த எங்களின் இதயத்தின் ஓசை எமது மாணவர்களின் வளர்ச்சிக்காக இனி வரும் காலங்களில் தொடர்ந்தும் ஒவ்வொரு தவணையும் ஒலித்துக் கொண்டிருக்கும் என்பதில் ஐயமேதுமில்லை.

இம் மாபெரும் நாளில் இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக இதுவரை காலமும் உழைத்த ஒவ்வொருவரையும் சிறப்பாக அதிபர்கள். ஆசிரியர்கள் அனைவரையும் நன்றியுடன் நினைவுகூறுகின்றோம். தொடர்ந்தும் எமது பாடசாலையின் உயிர்த்துடிப்புள்ள பங்காளிகளாகும் படி உங்கள் அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.

*அருட்தந்தை ச. ஜெயராஜன் கூஞ்சு அ.ம.தி*

*அதிபர்*

*தி/மூ/திரு இருதய வித்தியாலயம்,*

*இருதயபுரம், மூதூர்*

*இதய ஒலியின் அடுத்து வரவிருக்கும் இதழ்களில் சிறப்புச் செய்திகளும், மாணவர்களின் ஆக்கங்களும் வெளிவரக் காத்திருக்கின்றன என்பதை அறியத் தருகின்றோம்.*

## பாடசாலையின் போஷகர்
## அதிவணக்கத்திற்குரிய ஆயரின்
## ஆசிச் செய்திகள்

*"நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்." (மத் 5.14)*

பேதமற்ற ஒற்றுமையின் உலகைக் காண இன்று நாம் அனைவரும் ஆசிக்கின்றோம். இனத்தால், மொழியால், மதத்தால், சாதியால் பிளவுபட்ட நாம் இன்று நம் தனித்துவப் பண்புகளோடு ஒரே குலமாய் ஒன்றிணையத் துடிக்கின்றோம். வேகமாய் வளர்ந்து வரும் விஞ்ஞான தொழில்நுட்ப கலாச்சாரத்திலே மனித மாண்பும் மகத்துவமும் சிறந்த விழுமியங்களும் குறைந்து வருவதை நாளாந்தம் நாம் அறிகின்றோம். இந்த சவால்களின் மத்தியலும் எதிர் காலத்தில் புதியதொரு உலகம் படைக்க இன்றே எம் சிறுவர்களை உருவாக்கி வருகின்றோம்.

இந்நிலையில் இன்று இப் பாடசாலை நிறுவப்பட்டு 110 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுகின்றது. கடந்த காலங்களில் பலவிதமான சவால்களை சந்தித்த இப் பாடசாலை அவற்றின் மத்தியிலும் இன்று அமைதியாக வளர்ந்து வருவதை நாம் அவதானிக்கின்றோம்.

கடந்த காலங்களில் இப் பாடசாலையின் நலனுக்காய் உழைத்த அனைவரையும் நன்றியுடன் நினைவுகூறுவதோடு, தற்போதைய பாடசாலை குழுமத்தைச் சேர்ந்த அனைவரையும் சிறப்பாக கடந்த ஐந்து வருடங்களாக அதிபராகக் கடமையாற்றும் அருட்தந்தை ச.ஜெயராஜன் கூஞ்ஞ அ.ம.தி அவர்களையும் அவர்கள் பணி சிறக்க வாழ்த்தி, மாணவர்கள் அனைவருக்கும்

'நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்' என்ற இறை வார்த்தை உண்மையையும் நினைவுபடுத்தி உங்களுக்கு சிறந்த மன நிறைவுடன் கூடிய மகத்துவமான எதிர்காலம் அமைய இறையாசீர் வேண்டி வாழ்த்தி நிற்கின்றேன்.

அதி வண. ஆயர் யோ. கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை,

திருகோணமலை ஆயர்,

ஆயர் இல்லம்,

திருகோணமலை.

பாடசாலையின் நோக்கக் கூற்று:

எதிர்கால சவால்களுக்கு ஈடு கொடுக்கக் கூடிய முழு மனித ஆளுமையைக் கொண்ட ஆரோக்கியமான சமூகம்.

பாடசாலையின் பணிக்கூற்று

எதிர்கால சவால்களுக்கு ஈடு கொடுக்கக் கூடியதும் சமூகத்திற்குப் பொருத்தப் பாடுடையதுமான முழு மனித ஆளுமையைக் கொண்ட ஆரோக்கியமான மாணவர்களை உருவாக்குதல்.

## வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துச் செய்தி

இன்று எமது நாடு கல்வியிலும் பொருளாதாரத்திலும் உயர்ந்து வருவதையும் இன்னும் உயர் நிலையை அடைவதற்கு அனைவரும் உழைத்து வருவதையும் நாம் அனைவரும் நன்கு அவதானித்து வருகின்றோம். ஒரு நாட்டின் வளர்ச்சி அதன் கல்வியின் உயர்ச்சியிலே தங்கியுள்ளது. கல்வி இன்றி வாழ்வில்லை என்பது இன்றைய யதார்த்தமாகும். எனவே எமது பிள்ளைகளுக்கு சிறந்ததொரு கல்வியைக் கொடுப்பதற்காக நாம் அனைவரும் அயராது பாடுபட்டு வருகின்றோம்.

இந்த வகையில் மூதூர் கல்வி வலயத்தில் இருதயபுரத்தின் தி/மூ/திரு இருதய வித்தியாலயம் ஆரம்பிக்கப் பட்டதன் 110வது ஆண்டு நிறைவை பாடசாலை சமூகம் கொண்டாடுகின்ற வேளையிலே பாடசாலையின் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றார் மற்றும் பாடசாலை சமூகத்தைச் சார்ந்த அனைவரையும் வாழ்த்துகின்றேன். அத்துடன் இன்று இவர்கள் ஆரம்பிக்கும் புதிய முயற்சியாகிய இதய ஒலி என்ற சஞ்சிகை வெளியீட்டையும் பெரிதும் பாராட்டுகின்றேன். தொடர்ந்தும் இனி வரும் காலங்களிலும் இப் பாடசாலை எமது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வியைக் கொடுக்கும் நல்லதொரு கல்விச் சாலையாக திகழ மனமாற வாழ்த்துகின்றேன்.

*திரு. அ. விஜயானந்த மூர்த்தி*

*வலயக் கல்விப் பணிப்பாளர்,*

*வலயக் கல்வி அலுவலகம், மூதூர்.*

## அமல மரித் தியாகிகள் முதல்வரின் இதயத்திலிருந்து…

இலங்கைத் தீவின் திருகோணமலை மாவட்டத்தில் சிறப்புடன் விளங்கும் இருதயபுர கிராமத்தின் மக்களுக்கு அறிவொளி கொடுக்கும் "திரு இருதய வித்தியாலயம்" தனது 110வது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவதில் அமல மரித் தியாகிகள் நாமும் பெரு மகிழ்ச்சி கொள்கின்றோம்.

உலகில் அறத்தையும் பொருளையும் தேடுவதற்கு அடிப்படையாக இருப்பது கல்வியே என்கின்றனர் சான்றோர். ஏனெனில் "கல்வியை கேணியிலிருந்து இறைக்கும் நீருக்கு" ஒப்பிடும் முறை உலகம் முழுவதும் தொன்று தொட்டு அறிந்த உண்மை. இத்தகைய கல்விச் செல்வத்தை மாணவர்களுக்கு அள்ளிக் கொடுப்பது பாடசாலை என்றால் அது மிகையாகாது. "மானிடம் வென்றதம்மா" என்பது கம்பர் வாக்கு. மானிடம் வென்றிட வழிவகுப்பதே பாடசாலைகளின் நோக்கம்.

இன்று வளர்ந்து வரும் மனித சமுதாயம் அறிவினை ஆய்வறிவு, உணர்வறிவு, ஆன்மீக அறிவு என வகுத்து அதில் வளர்ச்சி கண்டு அறிவியலில் மேலோங்கி இருக்கும் இக்காலத்தில் அகம், புறம், பரம் என்று கலை, இலக்கியம், தொழில்நுட்பம், ஆன்மீகம் அனைத்தையும் கொடுக்கும் ஒரு ஒளியாகத் திகழும் "திரு இருதய வித்தியாலயம்" கடந்து வந்த பாதையில் பதித்த சாதனைகள், வெற்றிகள், அதன் வளர்ச்சிப் படிகள் சந்தித்த நெருக்கடிகள் யாவும் சீர்தூக்கிப் பார்க்கப் பட வேண்டியவை. "சிந்திக்காத கல்வியும் சீரணிக்காத உணவும் பாழ்" என்று

கூறுவார்கள். இப்பாடசாலையின் அதிபர் அருட்தந்தை ச.ஜெயராஜன் கூஞ்ஞ அ.ம.தி அடிகளார் சிந்தனையையும் ஆன்மீகத்தையும் இறைபற்றையும் சொத்தாகக் கொண்டு ஆற்றி வரும் பணிகளும் அவருடன் கூடப் பயணிக்கும் ஆசிரியர்களின் சேவையும் பெற்றோரின் அதீத ஒத்துழைப்பும் இப் பாடசாலையின் பெயரை மேலோங்கச் செய்வது கண்கூடு.

110 ஆண்டுகள் என்பது வரலாற்றில் பதிக்கப் பட வேண்டிய ஒரு உயர் நிலை அடைவு ஆகும். இத்தகைய உயர் நிலையை எய்தி இருக்கும் திரு இருதய வித்தியாலயம் மேலும் பல சாதனைகளைப் படைக்க வாழ்த்துகிறேன். பாடசாலை அதிபர், ஆசிரியர், மாணவர்கள், பெற்றோர் அனைவருக்கும் எனது நிறை மகிழ்ச்சியை வெளிப்படுத்தி பாராட்டி இறையாசீர் கூறி நிற்கின்றேன். வெள்ளத்தின் பெருக்கைப் போல் கலைப் பெருக்கும் கல்விப் பெருக்கும் மேவுமாயின் பள்ளத்தில் வீழ்ந்து கிடக்கும் குருடரெல்லாம் விழி பெற்று பதவி கொள்வர்.

அருட்தந்தை ம. போல் நட்சத்திரம் அ.ம.தி.

வட மாகாண முதல்வர்,

அமல மரித்தியாகிகள் சபை,

யாழ்ப்பாணம்.

பெற்றாருக்கு எம் இதயம் நிறைந்த நன்றிகள்

அழைக்கும் போதெல்லாம் இல்லை என்று சொல்லாது சிரமதானங்களில் மட்டுமல்லாது பாடசாலையின் அனைத்து நலன்களிலும் அக்கறை கொண்டு இரவு பகலாய் எம்மோடு இணைந்து உழைக்கின்ற பெற்றாருக்கு எம் இதயம் நிறைந்த நன்றிகள்.

- அதிபர் -

## முன்னாள் அதிபர்கள்

### திரு. கிறிஸ்ரி முருகுப்பிள்ளை

காலங்கள் மாறினாலும் யுகங்கள் கடந்தாலும் எத்தனை வருடங்கள் சென்றாலும் திரு இருதய வித்தியாலயத்தின் வரலாற்றில் நீங்கா இடம் பிடித்த ஒரு மாமனிதர் திரு. கிறிஸ்ரி முருகுப்பிள்ளை அவர்கள் என்றால் அதை மறுப்போர் எவருமிலர். பாடசாலை தரமுயர்த்தப்பட காரணமாக இருந்த இவர் தமது புகுந்த வீடாக இருதயபுர கிராமத்தை நினைத்துப் பெருமைப்படுவதோடு இப் பாடசாலையின் வளர்ச்சிக்காக மட்டுமன்றி இருதயபுர கிராமத்தின் நலனிலும் அதே வேளை ஆலயத்தோடு இணைந்த ஆன்மீகப் பணிகளிலும் பங்காற்றியவர் என்பது மிகவும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். திருகோணமலை கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ள இவரது சேவை தொடர்ந்தும் எமக்குக் கிடைக்க வாழ்த்துகின்றோம்.

### செல்வி மரியபுஸ்பம் ஸ்ரனிஸ்லாஸ்

போர்க்கால சூழலும் இடப்பெயர்வுகளும் எம்மை வாட்டிய காலத்தில் இப் பாடசாலையில் அதிபராகப் பணியாற்றியவர் என்பது குறிப்பிடத் தக்கது. அஞ்சா நெஞ்சமும் துணிவும் இவரது குண நலன்களுக்கு மேலும் அழகு சேர்ப்பவை. பல சவால்களின் மத்தியிலும் சோர்ந்து விடாமல் பாடசாலையை முன்னின்று நடத்திச் சென்றவர். அமைதியாக பாடசாலையின் வளர்ச்சிக்காக உழைத்தவர். இவரது பணிகள் சிறக்க வாழ்த்துகின்றோம்.

## பாடசாலையில் தற்போது பணியாற்றும் ஆசிரியர் விபரம்

1. அருட்தந்தை ச. ஜெயராஜன் கூஞ்சு அ.ம.தி (அதிபர்)
2. திருமதி ம. இ. உமாகிஷன் (உப அதிபர்)
3. திருமதி ம. சுப்பிரமணியம் (பகுதித் தலைவர் இடைநிலைப் பிரிவு)
4. திருமதி த. கெபாஸ் குரூஸ் (பகுதித் தலைவர் ஆரம்பப் பிரிவு)
5. திருமதி வி. கந்தசாமி
6. செல்வி டே. மேரி லெனிற்றா குரூஸ்
7. திருமதி இரா. யோகநாதன்
8. திருமதி சா. யோகரெட்ணம்
9. திருமதி ஜெ. மேரி கெசில்டா
10. திருமதி த. அகிலன்
11. செல்வி ஜூட் கிறிஸ்ரபெல் டி சௌசா
12. ஜனாப் எம்.எம்.எம். நிம்சாத்
13. திரு. இரா. சிவபதிஸ்
14. திரு. அ. பேரின்பராஜா

## தொண்டராசிரியர்கள்

1. செல்வி ப. நறிஸ்ரா
2. செல்வி சோ. நொயனி
3. திருமதி. க. சுதாகர்

## பாடசாலை மாணவர் விபரம்

| தரம் | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 08 | 16 | 24 |
| 2 | 11 | 08 | 19 |
| 3 | 07 | 09 | 16 |
| 4 | 04 | 09 | 13 |
| 5 | 12 | 11 | 23 |
| 6 | 09 | 17 | 26 |
| 7 | 15 | 12 | 27 |
| 8 | 17 | 15 | 32 |
| 9 | 11 | 10 | 21 |
| 10 | 09 | 04 | 13 |
| 11 | 06 | 10 | 16 |
| மொத்தம் | 108 | 121 | 229 |

## அன்றும் இன்றும்

விடிவிற்காய் காத்திருந்தது அன்றைய பச்சனூர். பலம் இழந்து கருணை தேடி ஏன் அத்தியாவசியம் இன்றியே ஏங்கிய நிலையில் ஆரம்பித்தது குட்டிப் பாடசாலை. இன்று இருதய நாதரின் பெயர் கொண்ட கல்விக் கூடமாய் காண்போர் மனதைக் கொள்ளை கொள்ளும் கல்விச் சாலையாய் திகழ்கிறது. கட்டிடமற்ற நிலையில் தொடங்கியது அன்றைய பாடசாலை. இன்று பல் வகையான கட்டிடங்களுடனும் கலைகள் மிளிரும் மாணவ மாணவியருடனும் காட்சி தந்து நிற்கிறது திரு இருதய வித்தியாலம்.

## பெற்றாரும் எமது பாடசாலை சமூகமும்

இருதயபுரம் கிறிஸ்தவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட ஒரு பாரம்பரியக் கிறிஸ்தவ கிராமம் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மையாகும். இக் கிராமத்து வாழ் மக்கள் தம் வரலாறு தெரியாக் காலத்திற்கு முன்பிருந்தே கிராமத்தின் தேவாலயத்தோடு தம் வாழ்வை இரண்டறக் கலந்தவர்கள் என்றால் அது மிகையாகாது. ஆரம்ப காலங்களில் இங்கு பணியாற்றிய அருட்தந்தையர்களின் கடின உழைப்பினால் ஒரு சமுதாயமாக உருவாக்கப் பட்டு இன்றும் தொடர்ந்தும் வழிநடத்தப் படுகின்றவர்கள் இக் கிராமத்தின் மக்கள் என்பது எம் அனைவருக்கும் பெருமைக்குரிய விடயமே.

ஆலயத்தோடு இணைந்த மக்களின் எதிர்கால அறிவுசார் வாழ்வை நோக்காகக் கொண்டு அப்போது இக் கிராமத்தின் மக்களுக்காக தம்மையே தியாகம் செய்த அருட்தந்தையினால் ஆலயத்தோடு சேர்த்து 01.03.1903 அன்று ஆரம்பிக்கப் பட்டதே இன்று நாம் காணும் திரு இருதய வித்தியாலயம். இப் பாடசாலையின் உருவாக்கத்திற்கு மட்டுமன்றி அன்று முதல் இன்று வரை எமது பாடசாலையின் வளர்ச்சியிலும் எமது கிராம மக்களின் வாழ்வின் நலனிலும் கல்வியிலும் மிகப் பெரிய பங்கினை வகிப்பது எமது ஆயரும் அருட்தந்தையர்களும் அருட்சகோதரிகளும் என்ற உண்மையை இதய சுத்தியுள்ள எவரும் ஏற்றுக்கொள்ள மறுக்கமாட்டார்.

இருதயபுர மக்களைப் பொருத்தவரையில் ஆன்மீகமும் கல்வியும் அவர்களின் இரு கண்கள் என்பது சாலப் பொருத்தமாகும். இரண்டு கண்கள் இரண்டு காட்சி காண முடியாததைப் போல இருதயபுரத்தின் தேவாலயமும் பாடசாலையும் எமது கிராம மக்களின் வாழ்வில் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்துள்ளது என்பது எமது வரலாற்று உண்மையாகும். எமது கிராமத்தின் வரலாற்றிலே பல சவால்களையும், பின்னடைவுகளையும் வாழ்வின் சோர்வுகளையும் நாம் சந்தித்துள்ள போதிலும் நாம் மனம் தளர்ந்து விடவில்லை. அரசியல்வாதிகளையும் சட்டம் பேசும் அதிகாரிகளையும் நாம் காணுகின்றோம். எமது வளர்ச்சியில் உண்மை அக்கறையுள்ளோர் எவரும் இல்லை என்பதே இதுவரையான உண்மை. போராடுகின்றோம் எமது பிள்ளைகளின் நல்லதொரு எதிர்காலத்திற்காக. சோர்வின்றி உழைக்கின்றோம் எமது பிள்ளைகளின் சிறந்த கல்விக்காக. இந்த உயர்ந்த குறிக்கோள் கிராமத்து மக்களுக்கும் பாடசாலைக்கும் இடையே எதுவித வேறுபாடுமின்றி நெருங்கிய உறவை வளர்த்துள்ளமை ஐயமற்ற விடயமாகும்.

எமது பெற்றோர் பாடசாலையையும் பாடசாலை நிர்வாகத்தையும், ஆசிரியர்களையும் பெரிதும் மதித்துப் போற்றி வருகின்றமையும் தேவை ஏற்படும் போதெல்லாம் தமது ஒத்துழைப்பை வழங்கத் தயாராக உள்ளமையும் அவர்களிடமுள்ள சிறப்பு அம்சமாகும்.

பாடசாலையின் விருது வாக்கு

**TRUE TO SELF**

## பாடசாலையின் (Band) மேலைத்தேய இசைக் குழு

## Bishop Kingsley's Band

எமது பிரதேசம் கடந்த காலப் போரினால் பல துன்பங்களையும் இன்னல்கள் இடையூறுகள் எமது வாழ்வின் முன்னேற்றத்தில் பல பின்னடைவுகளையும் மக்களின் தனிப்பட்ட சமூக வாழ்வில் பல பின்னடைவுகளையும் சந்தித்துள்ளது. அச் சூழ்நிலையில் எமது பிரதேசத்தில் ஏற்பட்ட 2006ம் ஆண்டின் பெரிய இடப் பெயர்வின் பின்னர் அமைந்த வாழ்க்கை முறைமை மாணவர்களின் உள்ளார்ந்த ரீதியாக கல்விச் சூழலுக்கு சாதகமாக அமையாத போதும் நாம் சோர்வுறாமல் மீண்டும் எமது பாடசாலையைக் கட்டியெழுப்ப முயன்றமை எம் அனைவருக்கும் நினைவிருக்கும்.

இந்நிலையில் எமது மாணவர்களுக்கு பாடப்புத்தகக் கல்வி மட்டும் போதாது அவர்களின் கல்வி சிறக்க அவர்கள் தங்கள் திறமைகளில் வளர வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து அவர்களின் உயர்வைக் கருத்தில் கொண்டு எமது பெருமதிப்பிற்குரிய ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களால் 2008ம் ஆண்டு வழங்கப்பட்டதுதான் இந்த (Band) மேலைத்தேய இசைக் கருவிகள். எமது ஆயருக்கு நன்றியாக அவரது பெயருக்கு அர்ப்பணிக்கப் பட்டு இன்றும் Bishop Kingsley's Band (ஆயர் கிங்சிலி ஆண்டகையின் பேண்ட் வாத்தியக் குழு) என்ற பெருமையுடன் இன்றும் சிறப்புடன் இயங்கி வருகின்றது.

## கார்மேல் அன்னை முத்தமிழ் மன்றம்

எமது மாணவர்கள் இயல்பாகவே சிறந்த கலைத்திறன் உடையவர்கள் என்பதில் வியப்பேதுமில்லை. அவர்களுடைய கலை ஆர்வத்தை வளர்ப்பதற்காக அமைக்கப்பட்ட களமே இந்த கார்மேல் அன்னை முத்தமிழ் மன்றம். பாடசாலையில் மட்டுமன்றி எமது கிராம மக்களின் நலனில் அன்று முதல் இன்று வரை அதிக அக்கறை கொண்டிருப்பது கிறிஸ்தவ சமய துறவிகள் என்ற உண்மையை கிராம மக்கள் எவரும் என்றும் மறக்கப் போதில்லை.

அந்த வகையில் எமது பாடசாலையில் பழைய காலந்தொட்டு கார்மேல் அன்னையின் அப்போஸ்தலிக்க கன்னியர் சபையைச் சேர்ந்த அருட்சகோதரிகள் அரும்பணியாற்றி வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இவர்களின் மகத்தான சேவையின் நினைவாக எமது முத்தமிழ் மன்றத்தை கார்மேல் அன்னைக்கு அர்ப்பணம் செய்து கார்மேல் அன்னை முத்தமிழ் மன்றம் என்ற பெயருடன் சிறப்புடன் இயங்கி வருகின்றது.

**அறிந்து கொள்ளுங்கள்**

இலக்கியம் மனித வாழ்வின் காலக் கண்ணாடி எனப்படும். இலக்கியமானது மரபு வழி இலக்கியம், நவீன ஆக்க இலக்கியம் என இருவகைப் படும்.

## இயூஜின் டீ மசனட் ஆங்கில மன்றம்

## Eugene De Mazenod English Academy

ஆங்கில மொழியின் அவசியம் இன்று மட்டுமல்ல பழைய காலம் முதல் உணரப்பட்டு வந்துள்ளது. எமது மாணவர்களுக்கு ஆங்கில மொழியினுடைய அவசியத்தை உணர வைத்தமை மட்டுமல்லாமல், அவர்களின் ஆங்கில அறிவை வளர்ப்பதற்கு பாடசாலை காலத்திற்குக் காலம் தன்னாலான முயற்சிகளை எடுத்து வருகின்றது. அதிலும் சிறப்பாக ஆங்கில மாணவர் மன்றம் உருவாக்கி அதன் மூலமாக மாணவர்களின் ஆங்கில மொழித் திறனை அதிகரிக்க முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றது. தற்போது அமல மரித் தியாகிகள் சபைத் துறவியர்கள் தங்கள் பணியை இப் பாடசாலையிலும் கிராமத்திலும் சிறப்பாக ஆற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. எனவே அமல மரித் தியாகிகள் சபையின் நிறுவுனர் புனித இயூஜின் டீ மசனட்டிற்கு பாடசாலையின் ஆங்கில மன்றம் அர்ப்பணம் செய்யப்பட்டு, **Eugene De Mazenod English** Academy (இயூஜின் டீ மசனட் ஆங்கில மன்றம்) என்ற பெயரில் இன்று வளர்ந்து வருகின்றது.

Literature

The decline of literature indicates the decline of a nation; the two keep pace in their downward tendency. (Goethe)

## கல்வி வளர்ச்சியில் எமது மாணவர்கள்

ஒரு நிறுவனத்தையும் அதன் வளர்ச்சி வேகத்தையும் நாம் சரிவரப் புரிந்து கொள்ள வேண்டுமானால் அதனுடைய பின்னனி, அது அமைந்துள்ள சூழல், அதற்கு சாதகமான பாதகமான காரணிகள், அதனுடைய பலம் பலவீனங்கள் போன்றவற்றை புரிந்து கொள்வது மிகவும் அவசியமாகின்றது. அந்த வகையில் எமது பாடசாலையானது சகல பாடங்களுக்கும் போதியளவு ஆசிரியர்களையும் சகல வசதிகளையும் கொண்ட ஒரு நகர்ப்புற பாடசாலையல்ல மாறாக அதற்கு நேர் எதிர்மாறான ஒரு கிராமப் புறப் பாடசாலை என்பதை யாவரும் மிக எளிதில் தெரிந்து கொள்வர்.

இப் பாடசாலையை நாம் ஒரு நகர்ப்புற பாடசாலையுடன் ஒப்பிடும் போது இதன் வளர்ச்சியை நாம் தவறாகக் கணிப்பிட்டு விட சந்தர்ப்பம் உண்டு. பெரும் பாலும் கிராமப் புறங்களில் மாணவர்கள் விரும்பிக் கற்பதை விட அவர்களைக் கட்டாயப் படுத்தி பாடசாலைகளுக்கு அனுப்பி வைப்பதும் பல சிரமங்களின் மத்தியில் அவர்களை கற்றலில் ஈடுபடுத்த வேண்டிய நிர்ப்பந்தமும் உண்டு என்றால் அது பொய்யாகா. இதற்கு எமது பாடசாலை ஒரு விதிவிலக்கல்ல.

பெற்றாரினதும் ஆசிரியர்களினதும் கடின முயற்சியில் மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வத்தைக் கொடுத்தாலும் பல

தடவைகளில் மாணவர்களின் முயற்சி போதாத நிலை பல சிரமங்களை உருவாக்குகின்றது. கல்வி கற்க வேண்டும் என்ற ஆர்வத்தை விட உழைக்க வேண்டும் என்ற ஆர்வம் மாணவர் மத்தியில் இன்று அதிகம் எனலாம். எமது மாணவர்களைப் பொறுத்தவரையில் அவர்கள் வேறெங்கும் விசேட வகுப்புகளுக்கு செல்ல முடியாதவர்களாக கல்விக்காக முழுக்க முழுக்க நம்பி இருப்பது பாடசாலையை மாத்திரமே.

எமது பாடசாலையில் நீண்ட காலமாக முக்கிய பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வந்தமை யாவரும் அறிந்த விடயமே. இருப்பினும் எமது கல்வி அதிகாரிகளின் கடின முயற்சியில் அண்மைக் காலங்களில் பல பாடங்களுக்கு ஆசிரியர்கள் வழங்கப்பட்டுள்ள போதும் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக கணித பாடத்திற்கு ஆசிரியர் எவரும் இப் பாடசாலைக்கு நியமிக்கப் படாமை வருந்தற்குரிய விடயமே.

இப்படிப்பட்ட சவால்களுக்கு மத்தியலும் மாணவர்களுக்கு சிறந்த கல்வியைக் கொடுத்து அவர்களை க.பொ.த.சா.தரம் சித்தியடைய வைத்து உயர்தரக் கல்விக்காக அனுப்புவதென்பது இலகுவான காரியமல்ல. இருப்பினும் அனைவரின் ஒத்துழைப்புடனும் கடின முயற்சியிலும் இன்று இப் பாடசாலையிலிருந்து எமது மாணவர்களும் க.பொ.த.சா.தரம் சித்தியடைந்து உயர் தரக் கல்வி கற்க செல்கின்றார்கள் என்பது எம் அனைவருக்கும் பெரும் மகிழ்ச்சியே. எம் அனைவரின் ஒத்துழைப்பில் இனி வரும் காலங்களில் எமது மாணவர்களும் வரும் சவால்கள் அனைத்தையும் வெற்றியுடன் எதிர்கொண்டு கல்வியில் சிறந்து விளங்க ஆசிக்கின்றோம்.

## நடந்து வந்த பாதையின் பதிவுகளில் எமது பாடசாலை

பச்சைக் கம்பளம் விரித்தாற் போல் காட்சியளிக்கும் இரதயபுரக் கிராமத்திலே திரு இருதய வித்தியாலயம் எனப் பெயரினைச் சூட்டி நூற்றிப் பத்தாவது விழாக் காணும் எம் கல்லூரித் தாயினை போற்றிப் புகழ்ந்து இத் தாயின் மகத்துவத்தை எடுத்துரைக்கின்றேன்.

அண்ட சாகரங்களால் சூழப்பட்டுள்ள அகிலத்தில் இறைவனால் கொடையாகக் கிடைக்கப் பட்ட படைப்பே மானிடமாகும். இதை அறிது அறிது மானிடராய்ப் பிறத்தல் அறிது எனக் கூறிய ஔவையாரின் வாக்கு புலப்படுத்துகிறது. இத்தகைய பிறப்பால் ஆகிய மானுடத்தை சமூகத்துடன் ஒட்டி நோக்கும் போது மானுடம் என்பது என்ன? மானுடத்திற்குரிய மனித நேயம் என்பது யாது? இவன் சமூகத்தில் தம்மை எவ்வாறு ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுமென்பதை கருத்தில் கொண்டு வாழ்க்கையில் எதிர்நோக்கும் சவால்களை ஏற்கவோ மறுக்கவோ முயலும் வேளையில் தான் அறிவு ஆற்றல் பண்பு ஆகியவற்றிற்கு ஏற்ப செயலாக்குகின்ற பொறுப்பை ஏற்கின்றோம்.

இதற்கமைவாக எம் கிராமத்திலே ஆரம்ப சமூகத்தை எடுத்து நோக்கும் போது படிப்பறிவில்லாத பாட்டாளி மக்களாகவும் கல்வியல் பூச்சியமாகவுமே காணப்பட்டனர். இவ்வாறான நிலையில் 1903ம் ஆண்டு அருட்தந்தை சாள்ஸ் பொனல் இப் பாடசாலையைக் கட்டிவித்தார். கல்வியின் மகத்துவமே தெரியாமல் இருந்த மக்களை வீடு வீடாகச் சென்று அங்குள்ள பிள்ளைகளை அழைத்து வந்து கல்வி புகட்டினார். கிணற்றுத்

தவளையைப் போல இருளில் வாழ்ந்த மக்கள் மத்தியில் கல்வி எனும் ஒளிச் சுடர் வீசத் தொடங்கியது. மக்கள் மிகவும் வறியவர்களாக குடிசைகளில் வாழ்ந்த காலம் அது.

அக் காலத்தில் எமது பாடசாலையிலே தரம் 1 – 5 வரையே காணப்பட்டது. துள்ளித் திரியும் பாலகர்கள் விளையாட்டு, கல்வி கலைத் துறைகளிலும் ஆர்வம் காட்டினர். மேற்கொண்டு கல்வியினை கற்பதற்கு வெளி இடங்களையும் நகர்ப்புறங்களையும் நாடிச்சென்றனர். அது மட்டுமன்றி அயல் பாடசாலைகளுக்கு காட்டு வழியே கால்நடையாகச் சென்று கல்வி கற்று வந்தனர்.

காலங்கள் உருண்டோடியது. நாகரீகமும் வளரத் தொடங்கியது. இப்படியான காலகட்டத்தில் எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சியிக்குச் சான்றாக 01.01.1990 அன்று எமது பாடசாலை தரம் உயர்த்தப் பட்டு க.பொ.த.சா.தர வகுப்புக்கள் வரை கொண்டு வரப்பட்டன. பாடசாலையின் விருது வாக்கிற்கேற்ப எமது கல்லூரித் தாயானவள் எமது நாட்டிற்கு சிறந்த நற் பண்புகளைக் கொண்ட நல்ல பிரஜைகளைக் கொடுத்திருக்கின்றாள் என்றால் அது மிகையாகா.

இனி வரும் காலங்களில் எம் கிராமத்தில் கல்வியானது கலங்கரை விளக்காக மாறி சகல துறைகளிலும் வெற்றி பெற்று மேலும் பாடசாலையின் பெயரும் புகழும் மேலோங்கவும் இதயத்தின் இருள் அகற்றி ஞானத்தின் ஒளியேற்றும் திரு இருதய வித்தியாலயம் அகிலம் எங்கும் ஒலிக்கவும் வேருக்குள் உறுதி வேம்புகளாக எம் மாணவர் வீறு கொண்டெழுந்து பாங்குடன் பயின்று பண்பினில் வளர ஆசிக்கின்றோம்.

## முதலாம் தர மாணவர்களின் வரவேற்பு நிகழ்வு

இந்த வருடம் எமது பாடசாலையில் புதிதாக முதலாம் தரத்திற்குச் சேர்துக் கொள்ளப்பட்ட மாணவர்களுக்கான விசேட வரவேற்பு நிகழ்வு 18.01.2013 அன்று மிகவும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. காலை 7.30 மணிக்கு விசேட ஆராதனையில் அவர்களுக்கான சிறப்பு ஆசீர் வழங்கும் நிகழ்வோடு அன்றைய நிகழ்வுகள் ஆரம்ப மாகின. அதனைத் தொடர்ந்து புதிய மாணவர்கள் தம் பெற்றாருடன் பிரதான மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு மலர்ச்செண்டுகள் கொடுத்து வரவேற்கப் பட்டனர். ஆரம்பப் பிரிவு மாணவர்களால் ஒழுங்கு செய்யப்பட்ட கலை நிகழ்வுகள் புதிய மாணவர்களுக்கான சிறப்பு நிகழ்வாக அமைந்தது. புதிய மாணவர்களுக்கு அன்பளிப்புகள் வழங்கப் பட்டு கௌரவிக்கப் பட்டனர். இவ்வருடம் முதலாம் தரத்திற்கு புதிதாக இருபத்து நான்கு மாணவர்கள் சேர்க்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வனப்பு மிக்க வாழ்விடம்

குறிஞ்சியா முல்லையா மருதமா என இனங்காண முடியாத சுற்றுச் சூழல். எழில் கொஞ்சும் மலைச்சாரல் இதமாய் ஓடும் குளிரோடை. அற்புதமாய் பவனி வர மெயின் ரோடு.

மிடுக்குடனே முன்னால் ஆழமாக ஆத்மீகம் சொல்லும் ஆண்டவரின் ஆலயம். அருகருகே வயல் வெளிகள். இத்தனைக்கும் மத்தியில் இருப்புக் கொண்டதுதான் திரு இருதய வித்தியாயலயம்.

## பாடசாலைக்கு மகுடம் சூட்டும் மாணவர்கள்

பாடசாலை என்பது வெறும் கல்வியைப் போதிக்கும் தனி நிறுவனமாக அல்லாமல் மனித சமுதாயத்தின் அறிவு, திறன், மனப்பாங்கு ஆகியவற்றை விருத்தி செய்யும் கலைக் களஞ்சியங்களாக விளங்குகின்றன. அந்த வகையில் ஒரு பாடசாலைக்கு மகுடம் அங்கு கல்வி பயிலும் மாணவர்களின் சாதனைகளும் அவர்களின் வெற்றிக் கேடயங்களும் அவர்கள் பெறும் உயர்ந்த பெறுபேறுகளுமே ஆகும் என்பதில் சிறிதளவும் ஐயமேதுமில்லை. அது மட்டுமல்லாது சமூகத்திற்கும் நாட்டிற்கும் ஏற்ற ஒரு நற் பிரஜையாகவும் மற்றவர்களுக்கு எடுத்துக் காட்டாகவும் வாழும் ஒரு மனிதனை ஒரு பாடசாலை உருவாக்குமேயானால் அதுவே அப் பாடசாலைக்குச் சூட்டப்படும் மகுடமாகும்.

எனவே இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஒரு மாணவனால் அவன் கற்கும் பாடசாலைக்கு நற்பெயர் கிடைக்க வேண்டுமானால் மாணவர்களிடம் சில குணவியல்புகள் அமைந்திருக்க வேண்டியது மிகவும் அவசியம். அந்த வகையில் ஒழுக்கம், பணிவு, கடமையுணர்வு, சிறந்த ஆளுமை, சுயசிந்தனை, தலைமைத்துவம், மரியாதை, கற்றலில் ஆர்வம், பொறுமை, தனித்திறமை, ஏனையவரை கற்றலில் கவரும் தன்மை போன்றன. இப் பண்புகளை உடைய மாணவர்களே அந்தப் பாடசாலைக்கும் சமூகத்திற்கும் தேவையானவர்களாகவும் அவசியமானவர்களாகவும் திகழ்கின்றனர்.

இவற்றிற்கேற்ப பாடசாலை சமூகம், பெற்றார், மாணவர் என்ற முத்தரப்பினரும் ஒருங்கிணைந்து செயற்படும் போது நாம் எமது பாடசாலைக்கு மகுடம் சூட்டுகின்றோம்.

## நன்றியுடன் நினைவு கூறுகின்றோம்.

எமது பாடசாலையில் கடமையாற்றி 2009ம் ஆண்டின் பின் இடமாற்றம் பெற்றுச் சென்ற அதிபர் ஆசிரியர்களை நன்றியுடன் நினைவு கூறுகின்றோம். அவர்களின் பெறுமதிமிக்க மகத்தான பணிக்காக என்றும் நன்றியுள்ளவர்களாய் இருக்கின்றோம்.

- **செல்வி மரியபுஸ்பம் ஸ்ரனிஸ்லாஸ்**

  30.10.1956 இல் பிறந்த இவர் இப் பாடசாலையில் 01.09.1998 அன்று அதிபராகப் பொறுப்பேற்று பத்து ஆண்டுகள் வரை பணியாற்றி 01.01.2009 அன்று இடமாற்றம் பெற்று மட்டக்களப்புக்குச் சென்றுள்ளார்.

- **திரு கந்தன் நவநாதன்**

  இவர் பயிற்றப்பட்ட விஞ்ஞான பாட ஆசிரியராக 25.03.2002 தொடக்கம் 01.07.2010 வரை கடமையாற்றியுள்ளார்.

- **அருட்சகோதரி மேரி சாந்தினி**

  இவர் பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியராக 21.05.2002 தொடக்கம் 01.01.2011 வரை கடமையாற்றியுள்ளார்.

- **திரு. சித்திரவேல் லவநேசன்**

  இவர் பயிற்றப்பட்ட தமிழ் பாட ஆசிரியராக 11.02.2002 அன்று முதல் 01.01.2011 வரை கடமையாற்றியுள்ளார்.

- **திருமதி. அனிஸ்ரா அருள்மேரி மத்தியு கொறேரா**

  இவர் பயிற்றப் பட்ட ஆரம்பப் பிரிவு ஆசிரியராக 28.08.2000 தொடக்கம் 01.01.2011 வரை கடமையாற்றியுள்ளார்.

❖ செல்வி முஹம்மட் ஐனூல் ஆபிதா

இவர் தேசிய கல்வியியற் கல்லூரி டிப்ளோமா தாரராக 15.10.2010 அன்று தொடக்கம் 17.02.2012 அன்று வரை கடமையாற்றியுள்ளார்.

❖ திருமதி சாரதா ஜேசுதாஸ்

இவர் பயிற்றப் பட்ட ஆரம்பப் பிரிவு ஆசிரியராக 11.02.2002 அன்று தொடக்கம் 01.01.2011 அன்று வரை கடமையாற்றியுள்ளார்.

❖ திருமதி மேரி மிக்கேலியா

இவர் மிக்கேலியா பயிற்றப் பட்ட கிறிஸ்தவ ஆசிரியராக 09.01.2012 அன்று தொடக்கம் 23.04.2012 வரை கடமையாற்றியுள்ளார்.

❖ திருமதி க. செல்வரஞ்சன்

இவர் பயிற்றப்பட்ட ஆரம்பப் பிரிவு ஆசிரியராக 16.03.2004 தொடக்கம் 01.01.2013 வரை கடமையாற்றியுள்ளார்.

❖ திருமதி ப. திலகேஸ்வரி

இவர் பயிற்றப் பட்ட ஆரம்பப் பிரிவு ஆசிரியராக 13.02.2004 முதல் 01.01.2013 வரை கடமையாற்றியுள்ளார்.

என்னோடு இணைந்து பாடசாலையின் வளர்ச்சிக்காகவும் மாணவர்களின் நல் வாழ்வுக்காகவும் உழைக்கின்ற ஒவ்வொருவருக்கும் என் இதயம் நிறைந்த நன்றிகள். நாம் எடுத்த இதய ஒலி என்னும் இப் புதிய முயற்சி தடையின்றி தொடர்ந்தும் வெளிவந்து வெற்றியைத் தர உங்கள் அனைவரினதும் ஒத்துழைப்பை வேண்டி நிற்கின்றேன். நன்றி.

- அதிபர் -

## பாடசாலைக் கீதம்

இதயத்தின் இருள் அகற்றி
ஞானத்தின் ஒளி ஏற்றும்
திரு இருதய வித்தியாலயம் - எங்கள்
திரு இருதய வித்தியாலயம்

உலகிற்கு ஒளியாய் நாம் வாழ்ந்திடவே – எம்
உள்ளங்களில் ஒளியை இங்கு ஏற்றிடுவோம்
உள்ளத்தின் உண்மையின் படி வாழ்ந்திடவே – எம்
கல்லூரித் தாயை நாம் போற்றிடுவோம்.

சிவப்பு வெள்ளை வர்ணங்களின் அழகினிலே
எரியும் தீபக் கொடியும் விண்ணில் பறப்பது போல்
வாழ்வில் என்றும் புகழினில் நாம் உயர்ந்திடவே – எம்
கல்லூரித் தாயை நாம் போற்றிடுவோம்.

# ஏங்கள் இதயத்தின் ஒலி

இந்த உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு உயிரும் வாழத் துடிக்கின்றது. இவ்வுலகில் வாழும் நாட்களை நாம் வெறு மனே உயிருடன் இருப்பதில் செலவிடாமல் எமது வாழ்வை சிறந்த வாழ்வாக்குவோம். மற்றவர்களை வாழவைப்போம். கடந்த 110 வருடங்களாக மூதூரில் இருதயபுரம் என்னும் கிராமத்தில் ஏழை சிறுவர்களின் வாழ்வை ஒளிமயமாக்க, அவர்களையே இவ்வுலகிற்கு ஒளியாக மாற்ற, மிகக் குறைந்த வளங்களுடன் பலவிதமான சவால்களின் மத்தி யிலும் தன்னால் முடிந்தளவிற்கு வீறுநடை போடுகின்றது இச் சிறிய பாடசாலை. இப்பாடசாலையில் கல்வி பயிலும் ஒவ்வொரு பிள்ளையும் எமது நாட்டின் எதிர்கால சவால் களுக்கு ஈடுகொடுக்கக்கூடிய முழு மனித ஆளுமையைக் கொண்ட சிறந்த மனிதர்களாக உருவாக ஆசைப்படுகின் றோம். அதற்காக (இச் செய்தி மலரை வாசிக்கின்ற) உங்கள் ஒவ்வொருவருடைய முழுமையான ஒத்துழைப்பை யும் ஆசீர்வாதத்தையும் வேண்டி நிற்கின்றோம்.

கடந்த காலங்களில் (இப் பாடசாலை ஆரம்பித்ததிலிருந்து இன்று வரை) இப் பாடசாலையில் பணியாற்றிய அதிபர் கள், ஆசிரியர்கள், இப் பாடசாலை நலனுக்காக உழைத்த மற்றும் அக்கறை கொண்டுள்ள ஒவ்வொருவருக்கும் எமது இதயம் நிறைந்த நன்றிகளை காணிக்கையாக சமர்ப்பிக் கின்றோம்.

**பாடசாலை சமூகம்,**
தி/மூ/திரு இருதய வித்தியாலயம்
இருதயபுரம்.

Printed by : Sun Printers-Batticaloa. ✆ 065-2222597

Published by T/Mu/Sacred Heart Vidyalayam on 01.03.2013 for private circulations only.